புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# நாலடியார் உணர்த்தும் சமுதாய வாழ்வியல்

பேரா. பொ. சரவணன்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தொன் போஸ்கோ கல்லூரி (இருபாலர்),
ஏலகிரி மலை, திருப்பத்தூர் மாவட்டம் – 635 853.
தமிழ்நாடு, இந்தியா.

ஆய்வுச்சுருக்கம்

‘நாலடியார்’ பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தொகுப்பைச் சார்ந்த ஒரு தமிழ் நீதி நூல் ஆகும். இது நான்கு அடி வெண்பாக்களைக் கொண்டது. சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நானூறு தனிபாடல்களின் தொகுப்பாகக் கருதப்படுகின்றது. நாலடியாருக்கு ‘வேளாண் வேதம்’ என்ற பெயரும் உண்டு. இதைப் புகழ்பெற்ற தமிழ் நீதி நூலான திருக்குறளுக்கு இணையாக பேசப்படும் சிறப்பைப் பெற்றுள்ளது. ஆளும் வேலும் பல்லுக்குறுதி நாளும் இரண்டும் சொல்லுக்குறுதி என்னும் மொழியில் நாலு என்பது நாலடியாரையும், இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும் என்பதாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள ஒரே தொகை நூல் நாலடியார் அதனடிப்படையில் இந்நூலிலுள்ள சமுதாய கருத்துக்களை எடுத்துச் சொல்கின்றது இவ்ஆய்வுக் கட்டுரை.

## முன்னுரை

பரந்த நிலப்பரப்பில் ஒன்றுகூடி வாழும் மக்கள் இனம் ‘சமுதாயம்’ என வழங்கப்படும். ‘காம்ரேட்’ என்னும் கிரேக்கச் சொல்லில் இருந்து சமூகம் என்ற சொல் பெறப்பட்டது. இச்சொல்லிற்கு மற்றவர்களுடன் தோழமையோடு அல்லது ஓரினமாக வாழ்தல் என்பது பொருள் ஆகும். மனிதன் தனியே ஒதுங்கி வாழமாட்டான். வாழவும் இயலாது. சமுதாயம் என்பதை ஒரே சொல்லாக வரையறுக்க வேண்டுமெனில் ஒழுங்குடன் இருப்பது என்பதாகும். பல்வேறு அறிஞர்களும் மனிதன் தன்னுடன் வாழ்பவருடன் கொள்ளும் அனைத்து வகைத் தொடர்புகளின் முழுமையைப் பற்றிக் குறிக்கும். ஒரு பொதுவான சொல் சமுதாயம் ஆகும். சுருங்கச் சொல்லின் சமுதாயம் என்பது ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்காகவும், ஒழுக்கமுடன் வாழ்வதற்காகவும் தோற்றுவிக்கப்பட்ட கூட்டமைப்பு அக்கூட்டமைப்பைப் பிரதிபலிக்கும் இலக்கியமான நாலடியார் உணர்த்தும் சமுதாய வாழ்வியலை நிரல்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சமுதாயப் பண்பாடுகள்

சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ள மயக்க வெளிப்பாட்டினைப் ‘பண்பாடு’ என்கிறோம். அந்தப் பண்பாடு சுவையுணர்வாகவும், நடையுடை பாவனைகளாகவும் தோன்றும். அப்பண்பாடு இல்லாதவனைக் காட்டுமிராண்டி என்கிறோம். வாழ்வின் பற்பல போக்குகள் அமைந்து பல்வேறு நிலைகளையும் இந்தப் பண்பாடு என்பது குறிக்கும். உடலைப் பற்றிய நன்னிலை, மனத்தைப் பற்றிய தூய்மை நிலை, பேச்சின் இனிமை இவையெல்லாம் பண்பாட்டில் அடங்கும். இத்தகைய உயர்ந்த பண்பாடு கொண்டோரை நாலடியார் சமுதாயத்தின் மேன்மக்கள், தகவுடையார் என்ற சொற்லளால் சிறப்பித்துக் கூறுகின்றது.

“கள்ளார் கள் ளுண்ணார், கடிவ கடிந்தொரீஇ
எள்ளிப் பிறரை இகழ்ந்துரையார் - தள்ளியும்
வாயில்பொய் கூறார், வடுவறு காட்சியார்

சாயிற் பரிவ திலர்"[1] (நாலடி.157)
என்று இப்பாடல் கூறுகிறது.

கல்வி, கேள்வி, ஒப்புரவு என்னும் மூன்று நற்பண்புகளையும் குறைவறப் பெற்றவர்களைப் பெரியோர் எனக் கூறுகின்றது.

கற்பதற்கு உரிய நல்ல நூல்களைக் கல்லாது கழிந்த நாட்களும் சீரிய அறிவுரைகளைக் கேட்கும் பொருட்டு பெரியவர்களிடத்துச் செல்லாது நின்ற நாட்களும் இரந்தவர்க்குத் தம்மால் இயன்ற பொருள்களைக் கொடாது நீங்கிய நாட்களும் நற்பண்புடைய பெரியோர்களிடம் உண்டாகமாட்டா எனப் பெரியோர் நல்லியல்பு. நாலடியார் இதனை,

"கல்லாது போகிய நாளும் பெரியவர்கள்
செல்லாது வைகிய வைகலும் வல்ல
கொடாது ரெழுந்த பகலும் உரைப்பின்
பாட அவாம் பண்புடையார்கண்"[2] (நாலடி.169)

ஒரு சமுதாயத்தில் உள்ள மக்கள் வாழ்க்கையை நடத்தும் முறையே பண்பாடு ஆகும். இதுதான் மானிடவியல் அல்லது சமூகவியல் பண்பாட்டுக்குக் கூறும் இலக்கணம். அக்கருத்தின் ஒளியில் ஈண்டு மக்கள் வாழ்க்கையை நடத்த வேண்டிய முறை குறித்து நாலடியார் கூறும் சிந்தனையைக் கீழே காணலாம்.

நூல் வழக்கிலும் உலக வழக்கிலும் அறிந்து கொள்ள வேண்டியவற்றை அறிந்து, அடக்கம் உடையவராய், அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சி செய்வதற்குத் தகுதி வாய்ந்த நற்செயல்களை உலகம் மகிழும்படி செய்து, அதனால் கிடைக்கும் ஊதியத்தின் அளவில் மகிழ்ந்து மன நிறைவுடன் வாழ்க்கையை நடத்தும் பண்புடையவர்கள் எந்தக் காலத்திலும் துன்பம் அடைந்து உயிர் வாழ்தல் இல்லை. இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை என்னும் திருஞானசம்பந்தரின் வாக்கிற்கு இலக்கியமாக அவர்களின் வாழ்க்கை இயங்கும்.

"அறிவது அறிந்து அடங்கி அஞ்சுவது அஞ்சி
உறுவது உலகு உவப்பச் செய்து - பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது"[3] (நாலடி.74)

என்பது பொறையுடைமை அதிகாரத்தில் இடம்பெறும் பாடலாகும். இப்பாடல் புலப்படுத்தும் வாழ்க்கைச் சிந்தனைச் சீரிய பண்பாட்டின் உச்சநிலை ஆகும்.

மனிதநேய வெளிப்பாடு

மனிதநேயம், மனிதனோடு இரண்டறக் கலந்த தன்மை உணர்வுகளின் வெளிப்பாடாகும். வறியவர்க்கு ஈதல் - பாடல் எண்.2,5,22,95,100,147,190, அறம் வலியுறுத்தல் - பாடல் எண்.4,7,26,29,32, இன்சொல் இயம்புதல் - பாடல் எண்.146, 156, சுயநலம் விடுத்தல் - பாடல் எண்.130, பொறுமை - பாடல் எண்.71,72,73,74,77,221, சினமின்மை - பாடல் எண்.61,62,63,64,65,66, தீமை செய்யாமை - பாடல் எண்.67,69, இழிசொல் சொல்லாமை - பாடல் எண்.70,157,168, மனிதநேயம் பிறக்க வேண்டுமானால் ஒவ்வொருவர் மனத்திலும் சுயநலம் என்பது நீங்க வேண்டும் என்பதை நாலடியார் பல்வேறு பாடல்கள் மூலம் உணர்த்துகிறது.

சுயநலம் விடுத்தல்

மனிதனுக்கு இயல்பிலேயே மனிதநேயம் உண்டு. ஆனால் பலர் சுயநலத்தின் பொருட்டும், மொழி, மதம், இனம் ஆகியவற்றில் அதிகப் பற்று கொண்டிருக்கின்ற காரணத்தினாலும் மனிதநேயமற்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இக்கருத்தை

"மனைப்பாசம் கைவிடாய் மக்கட்கென் றேங்கி
எனைத்தூழி வாழ்த்தியோ நெஞ்சே"[4] (நாலடி.130)

தன் வீடு, தன் நலன் என்று எண்ணும் குறுகிய மனப்பான்மையை மக்கள் விடுத்து, நம் நாடு, நம் மக்கள் என்று எண்ணும் பரந்த மனப்பான்மையை வளர்க்க வேண்டும். குறுகிய மனப்பான்மை மனிதநேயமிக்க சமுதாயம் உருவாவதற்குத் தடைக்கல்லாக இருக்கிறது. எனவே சுயநலத்தை விடுத்து அறச்செயல்களைச் செய்ய வேண்டும் என்று நாலடியார் உணர்த்துகின்றது.

அறம் செய்தல்

இனிய நல்லறங்களைச் செய்து மனிதநேயத்துடன் வாழ வேண்டும். இக்கருத்தை,

*“ஆவாம் நாம் ஆக்கம் நசைஇ அறம் மறந்து*
*போவாம் நாம் என்னாப் புலைநெஞ்சே”[5] (நாலடி.32)*

*மனித மனமானது அறத்தை மறந்து செல்வத்தை மட்டுமே விரும்பி அதற்காக முயற்சி செய்து வாழ்வதால் மரணத்தை மாற்றிவிட முடியாது. ஆதலால் மரணத்திற்குப் பிறகும் உறுதுணையாகக் கூடிய அறச்செயல்களைச் செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறது.*

*அறத்தை வலியுறுத்தல்*

*மனத்தின்கண் மாசில்லாது இருப்பதும், நல்ல வழியில் சென்று உண்மையாய் நிற்பதும் தானம், தர்மம் செய்து உயர்தலும் அறம் எனப்படும்.*

*“அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயன்”[6] (நன்.10)*

*என்று இலக்கண நூலான நன்னூல் வீடு பேற்றிற்கு இலக்கணம் வகுத்தது. தமிழ் இலக்கியங்களுக்கு உரியதாக வலியுறுதப்பட்டுள்ள நான்கு பொருள்களுள் அறம் முதன்மையானதாக உள்ளது.*

*அறிவற்றவர்கள் துன்பம் வந்து வாட்டும்பொழுது திணறுவார்கள். இத்துன்பத்திற்குக் காரணம் நாம் முன் செய்த வினையின் பயன் என்பதை உணர மாட்டார்கள். ஆனால் அறிவு பெற்ற பெரியோர்களோ நாம்பெறும் துன்பத்திற்குக் காரணம் முன் செய்த வினையே என்பதை உணர்ந்து தீய செயல்களை விட்டு விட்டு நல்ல செயலைச் செய்ய முயல்வார்கள். இக்கருத்தை,*

*“வினைப்பயன் வந்தக்கால் வெய்ய உயிரா*
*மனத்தின் அழியுமாம் பேதை-நினைத்ததனைத்*
*தொல்லைய தென்றுணர் வாரே தடுமாற்றத்து*
*எல்லை இகந்தொருவு வார்”[7] (நாலடி 33)*

*என்று நாலடியார் கூறுகிறது.*

*முடிவுரை*

*பல இனக்குழுக்கள் சேர்ந்து வாழும் அமைப்பே சமுதாயம் எனப்படும். இச்சமுதாயத்தில் மனிதநேயம், கல்வி முதலிய கூறுகள் நாலடியாரில் தனித்துவம் பெறுகிறது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கணியன் பூங்குன்றனார் பாடல் உலகளாவிய நட்பினை மலர வழி செய்கிறது. மனிதர்களுக்கிடையே தோன்றும் நட்பினால் மனம் விரிவடைகிறது. நாடுகளுக்கு இடையே தோன்றும் நட்பு அன்பை வளர்க்கிறது. நட்பில் பல வகைகள் உண்டு. அதனைப் பகுத்தப் பார்க்கும்போது நட்பின் உறவுநிலைகள் அடையாளம் காட்டப்படுகின்றன.*

*இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு துறையில் இருப்பவர்களின் நம்பகத் தன்மையினை அறிய வழி செய்கிறது. நட்பு ஒன்று தான் ஒரு மனிதனைத் தலை நிமிரச் செய்யும் என்பதில் ஐயமில்லை. உயிரினங்களின் மீது அன்பு காட்டுதல், தன்நலம் கருதாது பிறர் நலம் பேணுதல், பகுத்துண்டு வாழ்தல், கருணை நெஞ்சம் உடையவராக இருத்தல், இயற்கையை நேசித்தல், சாதிமத வேறுபாடுகளைக் களைதல், சுயநலம் விடுத்தல் போன்ற மனிதநேயப் பண்புகளின் பன்முகத் தன்மையை உணர்த்தும் வகையில் நாலடியார் பாடல்கள் அமைந்துள்ளன. வாழ்வின் அனுபவமே கற்கும் கல்வி ஆகும். வாழ்வியல் அனுபவமில்லாத எவரும் கல்வி கற்றவராக முடியாது. நாலடியாரில் கல்வியானது நடுவுநிலைமையோடு செயல்படுவதும், அறியாமையைப் போக்குவதும் ஆகும் என்று சுட்டப்படுகின்றது.*

*மேலும், நாலடியார் கற்க வேண்டியவை, கற்கும் முறை ஆகியவற்றையும் விளக்குகின்றது. கற்றவர்களோடு நட்பு கொள்ளுதலே சிறப்பு என்பதன் மூலம் கல்வியின் சிறப்பை அறியமுடிகின்றது. கீழ்க் குலத்தில் பிறந்தவனும் கல்வியின் மூலமாகத் தலைமைப் பண்பை அடையலாம் என்பதிலிருந்து கல்வியின் பயனை அறிய முடிகின்றது.*

*அடிக்குறிப்புகள்*

1. *தி.சு. பாலசுந்தரம், நாலடியார் உரை, ப.125.*
2. *மேலது, ப.133.*
3. *மேலது, ப.62.*
4. *தி.சு. பாலசுந்தரம், நாலடியார் உரை, ப.104.*
5. *மேலது, ப.29.*
6. *ச. திருஞானசம்பந்தம், நன்னூல் எழுத்ததிகாரம், காண்டிகை உரை, ப.14.*

7. ப. சரவணன், நாலடியார், ப.60.

துணைநூற்பட்டியல்


1. சரவணன். ப. - நாலடியார், (ஆங்கில மொழி பெயர்ப்புடன்), சந்தியா பதிப்பகம், பிளாட் நியூடெக் வைபவ், 77-53, ஆவது தெரு, அசோக் நகர், சென்னை - 83.
2. திருஞானசம்பந்தம். ச - நன்னூல் எழுத்ததிகாரம், காண்டிகை உரை, கதிர் பதிப்பகம், தெற்கு வீதி, திருவையாறு - 613 204.
3. பாலசுந்தரம், தி.சு - பதினெண்கீழ்க்கணக்கு நாலடியார் உரை, கழக வெளியீடு, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், 522, டி.டி.கே. சாலை, சென்னை - 1.


********* ********* ********** ********* ********* ********** ********** **********